பக்கங்கள்:-22

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 12 | வியாழக்கிழமை | 26.06.2025 | அதிர்வு 326 |
|---|---|---|---|---|---|

## செம்மணியில் நேற்று உணர்வெழுச்சியுடன் கவனவீர்ப்புப் போர்!



(விரிவான செய்தி 3,4,5ஆம் பக்கம்)



# தமிழரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் ஐ.நா. உறுதி

## தமிழ் எம்.பிக்களிடம் வோல்கர் டர்க் தெரிவிப்பு

"வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை உறுதியாகவுள்ளது."

- இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தெரிவித்தார்.

06

# செம்மணி மனிதப் புதைகுழியில் இன்று மீண்டும் அகழ்வு ஆரம்பம்



யாழ்ப்பாணம், செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தின் அடுத்தகட்ட அகழ்வுக்கான பாதீடு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், அதற்கான நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இன்று மீண்டும் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகின்றன.

செம்மணி சிந்துப்பாத்தி மனிதப் புதைகுழிகள் தொடர்பான வழக்கு, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, அகழ்வுப் பணிகளுக்காக நிதி விடுவிக்கப்பட்டுள்ள விடயமும், திட்டமிட்டபடி ஜ"ன் மாதம் 26ஆம் திகதியன்று (இன்று) அகழ்வுகளை ஆரம்பிக்க எந்தத்

06




திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இங்கு தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்களைச் சந்தித்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சாணக்கியன், செல்வம் அடைக்கலநாதன், வைத்தியர் பவானந்தராஜா மற்றும் புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோரோடு நேற்று இரவு விருந்துடன் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு எங்கேயும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடனான இந்தச் சந்திப்புகளில் தமிழரசுக் கட்சிச் செயலாளரும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்துடன் தமிழர் விவகாரம் தொடர்பில் நீண்டகாலமாக அதிகம் ஊடாடி வருபவருமான சுமந்திரன் இல்லை.

அவர் இந்த விவகாரத்தில் ஓரம் கட்டப்பட்டு விட்டாரா என்று நேற்று இரவு நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்து கேட்டார்.

அதற்கு நான் கொடுத்த பதிலைக்

06






# பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வு இன்னமும் கிடைக்கவே இல்லை

## ஐ.நா. ஆணையாளரிடம் வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் தீர்வு கிடைக்கப் பெறவில்லை என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக் காட்டினார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையிலான குழுவினருக்கும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று மாலை சுமார் 40 நிமிடங்கள் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன், மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட செயலர் சு.முரளிதரன், முல்லைத்தீவு மாவட்ட செயலர் அ.உமாமகேஸ்வரன் ஆகியோரும், ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தலைமையிலான குழுவினரும் பங்குபற்றினர். அத்துடன் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

"மீள்குடியமர்வு - காணி விடுவிப்புத் தொடர்பில் தற்போதைய நிலைமைகளை ஆணையாளர் கேட்டார். மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என அரசு தெரிவித்துள்ளது. அதற்கு அமைவாக படிப்படியாக காணிகள் விடுவிக்கப்படுகின்றன. இன்னமும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன என்று சுட்டிக்காட்டினோம்.

மேலும், வனவளத் திணைக்களம், வனஉயிரிகள் திணைக்களம் என்பன இங்குள்ள அதிகாரிகளுக்குத் தெரியாமல் காணிகளை சுவீகரித்துள்ளன. இதனால் மக்களின் வாழ்விடங்கள் மற்றும் விவசாயக் காணிகள் என்பன இழக்கப்பட்டுள்ளன.தற்போதையஅரசுமாவட்ட ரீதியிலான குழுக்களை அமைத்து இதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதை ஆணையாளருக்கு தெரியப்படுத்தினேன்.

காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பிலும் ஆணையாளரும், ஐ.நா.வின் வதிவிடப் பிரதிநிதியும் விடயங்களைக் கேட்டறிந்து கொண்டனர். அந்தப் பொறிமுறை சரியானது என்றும், ஆனால் மக்களுக்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் எனவும் மாவட்ட செயலர்கள் இதன்போது ஆணையாளருக்கு சுட்டிக்காட்டினர்.

மேலும், ஆணையாளர் இராணுவப் பிரசன்னம் மற்றும் மக்களின் காணிகளில் இராணுவத்தினர் விவசாயம் மேற்கொள்வது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார். முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் அந்த நடவடிக்கைகள் குறைந்துள்ளன என்றும், இன்னமும் சில பிரச்சினைகள் அதில் உள்ளன எனவும் ஆணையாளருக்கு சுட்டிக்காட்டினேன்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பிலும் ஆணையாளர் கரிசனையை வெளிப்படுத்தினார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் தீர்வு கிடைக்கப் பெறவில்லை என்பதைக் குறிப்பிட்டேன். அத்துடன் கடந்த காலங்களிலிருந்த அரசுகள் வெளிப்படுத்திய வேறுபாடுகள் இந்த அரசிடம் இல்லை என்பதையும், அது முற்போக்கானது என்பதையும் ஆணையாளருக்குத் தெளிவுபடுத்தினேன்.


போதைப்பொருள் பயன்பாடு மற்றும் அதற்குரிய புனர்வாழ்வு நிலையம் என்பன தொடர்பிலும் ஆணையாளர் கேள்வி எழுப்பினார். போதைப்பொருள் பாவனையாளர்களுக்கான புனர்வாழ்வு நிலையம் இன்னமும் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவில்லை என்பதையும், விரைவில் அதை அமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்கின்ற விடயத்தையும் ஆணையாளருக்கு தெரியப்படுத்தினேன்.

அந்தப் புனர்வாழ்வு நிலையங்கள் யாரால் இயக்கப்படும் என்கின்ற விடயங்கள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்து கொண்டார்.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகள் தொடர்பாகவும் ஆணையாளர் தனது கவனத்தைச் செலுத்தியிருந்தார். இந்தியாவிலிருந்து திரும்பி வரும் மக்களுக்கு உரிய உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதையும், அவ்வாறு செய்தால் மாத்திரமே அவர்களைத் தொடர்ச்சியாக இங்கே அழைக்க முடியும் என்ற விடயத்தையும் ஆணையாளருக்கு சுட்டிக்காட்டினேன்.

மேலும், வடக்கில் அமைக்கப்படவுள்ள முதலீட்டு வலயங்கள் தொடர்பிலும் என்னாலும், மாவட்டச் செயலர்களாலும் ஆணையாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டது." - என்று ஆளுநர் தெரிவித்தார்.










# செம்மணியில் நேற்று உணர்வெழுச்சியுடன் கவனவீர்ப்புப் போர்!

## பெருந்திரளாக ஒன்றுகூடிய மக்கள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழிக் குச் சர்வதேச நீதி கோரிய ‘அணையா விளக்கு’ போராட்டத்தின் இறுதி நாளான நேற்று மக்கள் உணர்வெழுச்சியுடன் கூடி கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரி மக்கள் செயல்

தொடர்ச்சி▼
















# செம்மணியில் நேற்று உணர்வெழுச்சியுடன் கவனவீர்ப்புப் போர்!

## பெருந்திரளாக ஒன்றுகூடிய மக்கள்


தொடர்ச்சி▲

அமைப்பின் ஏற்பாட்டில் "அணையா விளக்கு" போராட்டம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. தொடர்ச்சியாக மூன்று நாட்கள் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தின் இறுதி நாளான நேற்று பெருந்திரளாக மக்கள் கூடினர்.

முற்பகல் 10.10 மணிக்கு உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு, போராட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொடர்ச்சி▼




















# செம்மணியில் நேற்று உணர்வெழுச்சியுடன் கவனவீர்ப்புப் போர்!

## பெருந்திரளாக ஒன்றுகூடிய மக்கள்



தொடர்ச்சி▲

நேற்று நடைபெற்ற போராட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர். அத்துடன், இளையோர் பலரும் பெருந்திரளாகக் கூடியிருந்தனர்.

இதேசமயம், போராட்டத்தில் பங்கேற்றவர்கள் நேற்று அங்கு நடைபெற்ற கையெழுத்துப் போராட்டத்திலும் ஆர்வமுடன் கையொப்பங்களை வைத்தமையையும் அவதானிக்க முடிந்தது.









ජාතික ගමනාගමන කොමිෂන් සභාව
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
National Transport Commission

# ஜூன் முதலாம் திகதி முதல் பஸ் கட்டணம் குறைப்பு

எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் பஸ் கட்டணம் 2.5 வீதத்தால் குறைக்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும் ஆரம்ப கட்டணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பிட முன்னர் இன்னொரு விடயத்தைக் குறிப்பிடுவது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

நான்கு, ஐந்து நாள்களுக்கு முன்னர் பிரபலமான ஊடகம் ஒன்றின் தலைவர் – எனக்கு மிக நெருக்கமான நண்பர் – அழைப்பு எடுத்தார்.

"ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணிக்கு வரும்போது நிலைமைகளை ராஜதந்திர ரீதியிலும், விஞ்ஞான ரீதியிலும், தொழில்நுட்ப அடிப்படையிலும் நேரடியாக எடுத்துக் கூறப் பொருத்தமானவர்கள் அவசியம். சுமந்திரனை வந்து நேரில் பங்குபற்றி விடயத்தை ஆணையாளருக்கு விளக்கும்படி கேட்டால் என்ன?" என்று அவர் என்னிடம் வினவினார்.

"ஏன் செம்மணியில் வைத்துக் கூக்காட்டவா?" – என்று நான் நையாண்டியாகக் கேட்டு சிரித்தேன்.

சுமந்திரன் அந்தச் சமயத்தில் யாழ்ப்பாணத்திற்கோ செம்மணிக்கோ வருவதற்கு வாய்ப்பில்லை என்று நான் அவருக்கு விளங்கப்படுத்தினேன்.

குடும்ப திருமண நிகழ்வுக்காக 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மதியம் அவர் லண்டன் புறப்படுகின்றார் என அறிந்திருந்தேன். இது நீண்ட காலத்துக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட பயணம். லண்டனுக்கு மாத்திரமல்ல, ஐரோப்பிய நாடுகள் சிலவற்றுக்கும் அடுத்த ஓரிரு வாரங்கள் அவர் சுற்றுப்பயணத்தில் இருப்பார் என்று ஒரு தடவை என்னிடம் கூறியிருந்தார். அதனால்தான் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கொழும்பு வருவதற்கு முன்னர் அவரது பயண ஒழுங்குகளைக் கவனிப்பதற்காக இங்கு வந்த ஆணையத்தின் ஆசிய, பசுபிக் பிராந்திய பிரதிநிதியை அவர் சந்தித்து விரிவாகப் பேசி இருந்தார். பின்னர் உரிய நேரம் வரும்போது ஐ.நா. மனித உரிமை ஆணையரை அவர் சந்திப்பார் என்று தெரிகிறது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நண்பகலே அவர் லண்டன் புறப்பட்டு விட்டார்.

அவர் இலங்கையில் இல்லாதபடியால் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் இலங்கை விஜய விடயங்களோடு அவர் நேரடியாகச் சம்பந்தப்படவில்லை.

அவர் இலங்கையில் இல்லாதபோதும், நேற்றிரவு தமிழ்த் தலைவர்களை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் இரவு விருந்துடன் சந்தித்த சமயம் சுமந்திரன் இல்லாத குறையை நிவர்த்தி செய்வது போல் நீண்ட நேரம் – நீண்ட விளக்கங்களை – தமிழர் தரப்பு விடயங்களை – சாணக்கியன் எம்.பி. விரிவாக வழங்கினார் என அறிய வந்தது.

* * *

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் மற்றும் அவற்றைத் தொடர்ந்து இடம்பெற்ற சபைத் தலைவர்கள், மேயர்கள் தேர்வு போன்றவை தமிழரசுக் கட்சியைப் பொறுத்த வரை அதன் மாவட்டத் தலைவர்களின் தகுதி, தகுதியீனங்கள், போக்குகள் போன்றவற்றைக் கட்சித் தலைமைக்குத் துலக்கமாகத் தெளிவுபடுத்திக் காட்டி இருக்கின்றன என்பது உண்மை.

சரியோ, பிழையோ கிளிநொச்சி மாவட்டத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், கட்சி தலைமைக்குக் கட்டுப்படுகின்றாரோ, இல்லையோ கிளிநொச்சி மாவட்டத்தைக் கட்சி விடயத்தில் கட்டுக்கோப்போடு முன்னெடுக்கின்றார். பெருவெற்றியும் கட்சிக்கு வேண்டிக் கொடுக்கின்றார். சபை தலைவர் தெரிவுகளை இரண்டாம் பேச்சுக்கு இடமின்றி கனகச்சிதமாக ஒப்பேற்றுகின்றார்.

ஆனால் திருகோணமலையில் குகதாசனும், மன்னாரில் சார்ள்ஸ் நிர்மலநாதனும் கடைசி நேரம் வரைப் பண்ணிய திருக்கூத்துக்களால் கட்சிக்கும் பல தொந்தரவுகள். மக்கள் வாக்களிப்பு மூலம் கிடைத்த வெற்றியை சபை நிர்வாகத்தை கைப்பற்றும் வெற்றியாக மாற்றுவதில் பல பின்னடைவுகள், நெருக்கடிகள்.

இப்போது முல்லைத்தீவு மாவட்ட பொறுப்பை கையாண்ட ரவிகரன் எம்.பியும் தமக்கு விருப்பமான – தம்மிஷ்டப்படையான – நபர்களை சபை தலைவர்களாக மாற்ற முடியவில்லை என்று ஆதங்கத்தில், மாவட்ட செயலாளர் பொறுப்புத் தொடர்பில் ராஜினாமாக் கடிதத்தை கட்சியின் தலைவருக்கும் செயலாளருக்கும் அனுப்பிவிட்டார் என அறியவருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறிதரன் பெற்றுக்கொண்ட உறுதியான வெற்றி போல, தனித்து தமிழரசு ஆட்சி அமைப்பதற்கான வெற்றிகளை சபைகளில் ஈட்டியிருந்தால், கட்சியின் ஏனைய மாவட்டத் தலைவர்கள் சிறிதரனைப் போல தம் இஷ்டப்படி சபை தலைவர், மேயர் தெரிவுகளை முன்னெடுக்கலாம்.

அப்படி இல்லாமல், அறுதிப் பெரும்பான்மையை பெறாமல், தொத்துப்பறி வெற்றியை வைத்துக்கொண்டு, தமது கட்சிக்கு சபைத் தலைவர் பதவியை பெறுவதென்றால் மற்றைய கட்சிகளோடு – தரப்புகளோடு – ராஜதந்திரமாக, சாணக்கியமாக, விட்டுக்கொடுப்போடு அணுக வேண்டும். சார்ள்ஸ் நிர்மலநாதனும் குகதாசனும் இந்த யதார்த்தத்தைப் புரியாமல் குசும்பு பண்ண முயன்றமையால்தான் நெருக்கடி.

அதே நிலைமைதான் ரவிகரன் எம்.பிக்கும். ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்டத் தலைவர் பதவியில் இருக்கும் வைத்தியர் சிவமோகன் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கிறார். இந்த சமயம் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் ரவிகரனும் தமது ராஜினாமாக் கடிதத்தை அனுப்பிவிட்டு ஒதுங்கி விட்டார். இப்போது பொறுப்பு பீற்றர் இளஞ்செழியனின் தலையில். இன்றும் நாளையும் அவர் தமது திறமையை – தந்திரோபாய வலிமையை – நிரூபிக்க வேண்டி இருக்கும்.

## செம்மணி மனிதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தடங்கலும் இல்லை என்றும் நீதிமன்றத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில், கடந்த பெப்ரவரி மாதம் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அண்மையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. மூன்று குழந்தைகளின் மனிதச் சிதிலங்கள் உட்பட 19 மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட நிலையில், அந்தப் புதைகுழி மனிதப் புதைகுழியாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது.

"மனிதப் புதைகுழி" என்ற அடையாளப்படுத்தலுக்கு அமைய இன்று அகழ்வுப் பணிகள் மீண்டும் தொடரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் சென்று பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழரின் பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை அவர், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று இரவு 7 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், இரா. சாணக்கியன், செல்வம் அடைக்கலநாதன், சண்முகநாதன் சிறீபவானந்தராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் வடக்கு – கிழக்கில் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்புகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறல், படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான நீதி, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள், சர்வதேச நீதிப் பொறிமுறைகள் போன்ற பல விடயங்கள் பேசப்பட்டன என்று சந்திப்பில் பங்கேற்ற தமிழ் எம்.பிக்கள் தெரிவித்தனர்.



# மனோகர குருக்களின் ஆத்ம அஞ்சலி நிகழ்வு

யாழ் . வல்வெட்டித்துறை ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தியநாத சுவாமி பரம்பரை ஆலய (வல்வை சிவன் ஆலயம்) பிரதம குருவாக நீண்ட காலம் இறை சேவை செய்த ஆகம வைதீக சிரோன்மணி சிவஸ்ரீ பரமேஸ்வரக்குருக்கள் மனோகர குருக்களின் ஆத்ம அஞ்சலி நிகழ்வில் பெருமளவான மக்கள் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 12 ஆம் திகதி சிவபதமடைந்த சிவஸ்ரீ மனோகர குருக்களின் ஆத்ம அஞ்சலி நிகழ்வு வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் நேற்று புதன் கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றது.

இதன்போது மறைந்த வல்வை சிவன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீபரமேஸ்வர மனோகரக் குருக்களின் ஆத்ம சாந்தி வேண்டி கூட்டு பிரார்தனை இடம்பெற்று மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வல்வெட்டித்துறை வாழ் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்று அஞ்சலி செலுத்தியிருந்தனர்.









# மீன் வாங்க சென்ற வயோதிபர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

யாழ்ப்பாணம் காக்கைதீவு மீன் சந்தைக்கு மீன் வாங்க சென்ற வயோதிபர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்லத்தம்பி ரவீந்திரன் (வயது 72) என்பவராவார்.

மேற்படி வயோதிபர் நேற்று புதன் கிழமைசைக்கிளில் மீன் சந்தைக்கு சென்றுள்ளார். அச்சமயம் சந்தைக்குள் மயங்கிவிழுந்தநிலையில்யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் உயிரிழந்துள்ளார்.

வந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாணப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# நடிகர் மோகன்லாலை சந்தித்தார் இலங்கை நடிகர் பிமல் ஜயகொடி



மலையாள திரைப்படமான திரிஷ்யத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்த தென்னிந்திய நட்சத்திர நடிகரான மோகன்லாலை சந்தித்தமை தமது வாழ்க்கையின் மிக முக்கிய தருணங்களில் ஒன்றாகும் என இலங்கை நடிகர் பிமல் ஜயகொடி தெரிவித்துள்ளார்.

மோகன்லாலின் ஆசி தர்மயுத்தய-2 படப்பிடிப்பிற்கு ஊக்கமாக அமைந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மலையாள நட்சத்திர நடிகர் மோகன்லால் விஸ்வநாதன் மற்றும் இலங்கை நடிகர் பிமல் ஜயகொடி ஆகியோர் கொழும்பு Galle Face Hotel இல் சந்தித்து கலந்துரையாடினர்.

இருவேறு நாடுகளைச் சேர்ந்த பிரபல நடிகர்கள் இருவரின் சந்திப்பு சினிமா துறையில் விசேட அம்சமாக வுள்ளது.

இலங்கை தயாரிப்பான தர்மயுத்தய-2 திரைப்படத்தின் படப்பிடிப்பு தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இவர்களிருவரும் சந்தித்துள்ளனர்.

தர்மயுத்தய-2 திரைப்படமானது நடிகர் மோகன்லால் நடிப்பில் வெளியான திரிஷ்யம் 2-இன் ரீமேக் ஆகும்.

மோகன்லால் நடிப்பில் தற்போது உருவாகிவரும் திரிஷ்யம்-3 திரைப்பட படப்பிடிப்பை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாக நடிகர் மோகன்லால் இந்த சந்திப்பின் போது குறிப்பிட்டுள்ளார்.



# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையைப் பாரப்படுத்த வேண்டும்

## அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் ஐ.நா. ஆணையாளரிடம் நேற்று கூட்டாக மனு

இலங்கையில் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் விவகாரத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் கூட்டாகக் கையொப்பமிட்ட இந்த மனு, நேற்று யாழ்ப்பாணம் வந்த ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். ஐ.ஓ.எம். பணிமனையில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் சிவில் சமூக அமைப்புக்களைச் சந்தித்தபோதே இந்த மனு அவரிடம் கையளிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்குச் சர்வதேச விசாரணை கோரிய அந்த மனுவில் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி., இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களான த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் எம். பி., தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளர் மு.சந்திரகுமார், ஜனநாயகத் தமிழரசுக் கட்சியின் தலைவர் கே.வி.தவராசா, தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ்ச் சிவில் சமூக அமையம், வேலன் சுவாமிகள், வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம், தமிழ்ச் சமூகச் செயற்பாட்டாளர்கள், இலங்கை ஆசிரியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சின்னத்தன அரசியல்!

“செம்மணியில் புதைக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி நடத்தப்பட்ட போராட்டம், அதை விடுத்து அங்கு படுபோக்கிரித்தனமாக நடந்து கொண்டவர்கள் பற்றிய பேசுபொருளாக மாறிவிட்டது. இது வருத்தத்துக்குரியது. நாங்கள் தோற்றுக் கொண்டே இருக்கின்றோம்.”

- முகப்புத்தகம் ஒன்றில் தமிழ் ஆர்வலர் ஒருவர் இந்த சாரப்பட விசனத்துடன் ஆழ்ந்த கவலை தெரிவித்திருந்தார்.

ஆம். தமிழர்களின் உணர்வெழுச்சிக்கான போராட்டத்தை சில தற்குறிப் பிரகிருதிகள் கொச்சைப்படுத்தி விட்டமைதான் நேற்றைய போராட்டத்தின் பின்னடைவாகும்.

செம்மணியில் புதைக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி நடத்தப்பட்ட போராட்டம் அது. அந்தப் போராட்டத்திற்கு எல்லோரையும் - வேறுபாடின்றி - வரும்படிதான் அழைத்து இருந்தார்கள் ஏற்பாட்டாளர்கள். அப்படி வந்தவர்கள் எல்லோரும் அங்கு மலர் அஞ்சலி செலுத்தி ஆதரவு தெரிவிப்பதன் மூலம் அங்கு புதைக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும் என்ற ஒத்த - ஏக - கோரிக்கையில் தங்களையும் இணைத்துக் கொள்கின்றார்கள் என்பதுதான் அர்த்தம். அப்படி நம் மக்களை அங்கு புதைத்தவர்களே நேரில் அங்கு வந்து இந்தப் போராட்டத்தில் பங்குபற்றி மலர் அஞ்சலி செலுத்தினார்கள் என்றால், இப்படிப் புதைக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும் என்ற கோரிக்கைக்கு அவர்களும் சேர்ந்து ஆதரவளிக்கின்றார்கள் என்பதுதான் அர்த்தம்.

அப்படி ஆதரவளிக்க வந்தவர்களை, அரசியல் வேறுபாடுகள் பார்த்துத் துரத்தி அடிக்க முயற்சித்தமை மிகக் கேவலமான - கீழ்த்தரமான - மூன்றாம் தரமான நடவடிக்கை.

நேற்றைய இறுதி நிகழ்வுக்கு முன்னரே, நேற்று முன் தினம் மாலையே, காவி வேஷ்டியுடன் அரசியல் நடத்தும் கபடதாரி சாமியார் ஒருவர் இந்தத் துஷ்டத்தனமான மூன்றாந்தர வேலையை அங்கேய ஓதி, ஆரம்பித்து விட்டார் என்பது நோக்கற்பாலது.

அரசியலுக்கு பினாமிகளை வளர்ப்பது எவ்வளவு தூரம் பூமரங்காக திரும்பி வந்து தாக்கும் என்பதை அரசியல்வாதிகள் நேற்றைய சம்பவத்துக்குப் பிறகாவது உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் சாவு வீட்டில் என்ன அடாவடித்தனம் புரியப்பட்டதோ அதுவே, அதே போன்ற சக்திகளால் இப்போதும் செம்மணியிலும் ஒப்பேற்றி முடிக்கப்பட்டிக்கின்றது.

இந்த அடாவடித்தனம்தான் தமிழர் அரசியல் என்றால், அதை முன்னெடுக்கும் பிரகிருதிகள் அத்தகைய போக்கை நம்பி நீண்ட காலத்துக்கு அரசியல் செய்ய முடியாது. தமிழ் மக்கள் தொடர்ந்து முட்டாள்களாகப் பார்த்துக் கொண்டு ‘சிரி’த்திருக்க மாட்டார்கள்.

மனிதப் புதைகுழி விடயத்திற்கு நீதி வேண்டும் என்ற போராட்டத்தில் இணைவதன் மூலம் நீதி கிடைப்பதை யாரும் குறைமதிப்புக்கு உள்ளாக்கி விட முடியாது என்பதை இந்தப் பிரகிருதிகள் புரிந்து கொள்ளாமல் நடந்து கொண்டமைதான் அல்லது புரிந்து கொண்டும் தங்களது சின்னத்தன அரசியலை - அந்த அரசியல் அடாவடித்தன கைவரிசையை - அங்கு காட்டமுற்பட்டமைதான் அந்த புனிதமான போராட்டத்தை கொச்சைப்படுத்தி விட்டது.

நேற்று மாலையில் கொழும்பிலும் பிற இடங்களிலும் செம்மணியில் நடைபெற்ற மக்கள் போராட்டம் பற்றி யாரும் தங்களுக்குள் உரையாடிக் கொண்டார்கள் என்று தெரியவில்லை. மாறாக, செம்மணிக்குப் போன அரசியல்வாதிகளை சின்னத்தனமாக நடந்து துரத்தியமை பற்றித்தான் கொழும்பு எங்கும் ஒரே பேச்சு. தென்னிலங்கை அரசியல் தலைமைகள், இராஜதந்திரிகள், முக்கியஸ்தர்கள் ஊடக தரப்புகளுடன் தொடர்பு கொண்டு கேட்டது போராட்டம் பற்றி அல்ல. போராட்டத்திற்கு வந்தவர்களைத் துரத்திய கீழ்த்தரமான அரசியலைப் பற்றித்தான்.

“செம்மணியில் புதைக்கப்பட்டவர் விடயத்தையும், அவர்களுக்கு நீதி கிடைக்கின்ற விவகாரத்தையும் கூட உங்கள் மக்கள் அரசியலாக்கினால், அதன் மூலம் அவர்கள் அடையப் போவது என்ன?” - என்ற கேள்வியைத்தான் சில ராஜதந்திகள் எழுப்பினார்கள்.

இந்தப் போராட்டம் நல்லதோர் முயற்சி. ஆனால் சில அரசியல் தரப்புகள் அதற்குள் ஊடுருவி அதனைக் கெடுத்து விட்டன.

நடந்து முடிந்த தேர்தலில் தமிழ் மக்களின் அங்கீகாரம் மற்றைய அனைத்து தமிழ் கட்சிகளையும் தாண்டி - யாழ்ப்பாணத்தில் நாடாளுமன்ற தேர்தலில் வென்ற தேசிய மக்கள் சக்தியையும் புறமொதுக்கி - தமிழரசுக் கட்சிக்குத்தான் தமிழ் மக்களால் வழங்கப்பட்டது. அந்த கட்சியின் அந்த வெற்றியை அந்த கட்சிக்கு பெற்றுக் கொடுத்த தலைமைக்கு - தலைவருக்கு - நடந்த அகௌரவம், அந்த அடாவடித்தனத்தை புரிந்த அராஜகவாதியை தன் பினாமியாக வைத்திருக்கும் அரசியல் தலைமையின் கீழ்த்தரமான போக்கும் கூட, தமிழ் மக்களால் நன்கு அவதானிக்கப்பட்டிருக்கும்.

சரியான பாடத்தை அவர்கள் காலகதியில் வழங்குவார்கள் என எதிர்பார்க்கலாம்.

# பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு



நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் எதிர்வரும் ஜுலை மாதம் 09 ஆம் திகதி டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது பரவிவரும் டெங்கு மற்றும் சிக்குன் குனியா நோய்களின் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மற்றும் க்ளீன் ஸ்ரீலங்கா செயலகம் இணைந்து இந்த வேலைத்திட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் நோய் பரவாமல் தடுத்தல், நுளம்பு உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிந்து அவற்றை அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்திற்கு சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள், காவல்துறை, முப்படை உள்ளிட்ட பல்வேறு தரப்பினரது ஆதரவைப் பெறுவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், எதிர்காலத்தில் இந்த வேலைத்திட்டத்தினை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்களிலும் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

# எல்ல வனப்பகுதியில் பாரிய தீப்பரவல்

எல்ல சுற்றுலாப் பகுதியில் உள்ள வனப்பகுதியில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

நிலவும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக தீ வேகமாக பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வன பாதுகாப்பு அதிகாரிகளால் தீயை கட்டுப்படுத்த முடியாத நிலையில், தியத்தலாவ இராணுவ முகாமை சேர்ந்த அதிகாரிகள் தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்தவனப்பகுதிக்கு அருகில் உள்ள உணவகத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் குப்பைகளுக்கு தீ வைக்க முயற்சித்த போது கவனக்குறைவு காரணமாக இந்த தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் ஏலவே இவ்வாறு தீப்பரவல் ஏற்பட்டு பாரியளவான வனப்பகுதி அழிவடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இந்த மாதத்தின் 22 நாள்களில் 93,486 சுற்றுலா பயணிகள் வருகை



இந்த மாதத்தின் முதல் 22 நாட்களில், 93,486 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர்.

அதன்படி, இவ்வருடம் இதுவரையில் இலங்கைக்கு வந்துள்ள மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,123,289 என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜுன் மாதத்தில் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியா, பிரித்தானியா, சீனா, பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, ஜெர்மனி மற்றும் அமெரிக்காவிலிருந்து வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.













# வவுனியா பல்கலைக்கழக முகாமைத்துவ துறை Amana takafull life Plc நிறுவனத்துடன் ஒப்பந்தம்

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வியாபாரக் கற்கைகள் பீடத்தின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறையானது **Amana takafull life Plc** நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடபட்டுள்ளது. இது கல்வி மற்றும் தொழில் துறை ஒத்துழைப்பை வலுப்படுத்தும் ஒரு முக்கியமான கட்டமாகக் கருதப்படுகிறது.

இந்நிகழ்வானது பாரம்பரிய மங்கள விளக்கேற்றுவதன் மூலம் ஆரம்பமாகியது. இதில் முக்கிய அதிதிகளான சிரேஸ்ட பேராசிரியர் அ. அற்புத்தராசா, பேராசிரியர் யோ. நந்தகோபன் ,

கீஹான் ராஜபக்ஷ, புவிராஜ் உதவி பொது முகாமையாளர் எஸ்.ஏ. ஜூட் லியோன் மற்றும் திரு. எஸ். சிவநேந்திரா உட்பட இரு நிறுவனங்களின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

திருமதி கே.பி.டபிள்யூ. தில்ஹானி ஆர். வீரசிங்கவினால் ஒப்பந்தத்தின் விளக்கம் வழங்கப்பட்டது.

பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தம் அதிகாரபூர்வமாக கைச்சாத்திடப்பட்டு நினைவு பரிசும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில்பல்கலைக்கழகநிர்வாகிகளான பதிவாளர், நிதியாளர் உதவிப் பதிவாளர், துறைத்தலைவர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி மற்றும் கல்விசாரா பணியாளர்கள் ஆகியோர் ஈடுபாடுடன் பங்கேற்றனர். இது இந்நிறுவன ஒத்துழைப்பிற்கான பல்கலைக்கழகத்தின் வலுவான ஆதரவை பிரதிபலிக்கிறது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், கூட்டு ஆய்வு மாணவர்களின் திறன் மேம்பாடு, மற்றும் தொழில்துறை தொடர்புகளை ஊக்குவிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.










# நல்லூரில் வழிபாடு செய்தார் மனித உரிமைகள் ஆணையர்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கும் சென்று வழிபாட்டை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த ஆணையாளர் பல்வேறு இடங்களிற்கும் சென்று பல தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இதற்கமைய சிவில் சமூக பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

செம்மணி மனித புதைகுழி அகழ்வு நடைபெறும் இடத்தையும் பார்வையிட்டு அங்கு நின்றிருந்தவர்களையும் சந்தித்தார்.

அதே போன்று செம்மணி படுகொலைக்கு நீதி கோரி முன்னெடுக்கப்பட்டு போராட்ட களத்திற்கும் சென்று அங்குள்ளவர்களை சந்தித்து கலந்துரையாடியமையுடன் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு மலரஞ்சலியும் செலுத்தினார்.





# குச்சவெளிப் பிரதேச சபையின் தலைவரை கைது செய்ய உத்தரவு; பிணைக்கும் அனுமதி

(எஸ்.கீதபொன்கலன்)

குச்சவெளி பிரதேச சபையின் தலைவர் அயினியாப்பிள்ளை முபாரக் நேற்று கொலை பயமுறுத்தல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு,5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

அப்துல் மனாப் றிஷான் என்ற பிரதேச சபை உறுப்பினரைக் கொலை செய்யப் போகிறார் என இவர் அச்சுறுத்தல் விடுத்தார் எனக் கூறப்பட்டது. அதை அடுத்து இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

குச்சவெளி பிரதேச சபையின் தலைவர் தெரிவின் போது தன்னை எதிர்த்துப் போட்டியிட்டால் கொலை செய்வேன் என்று அ.முபாரக் மற்றும் அவரது அண்ணன் அ.அமீன் ஆகிய இருவரும் தன்னைத் தொடர்ந்து பயமுறுத்தினர் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் அப்துல் மனாப் றிஷான் திருகோணமலை மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபரிடம் கொலை பயமுறுத்தல் முறைப்பாட்டை கொடுத்திருந்தார்.

இதனை அடுத்து நேற்று குச்சவெளி சுற்றுலா நீதிமன்றில் நடைபெற்ற வழக்கின் போது முபாரக்கையும் அவரது அண்ணன் அயினியாப்பிள்ளை அமீன் ஆகிய இருவரையும் கைது செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார். எனினும் எதிராளி தரப்பு வழக்குரைஞர்களின் வாதத்தை அடுத்து எதிராளிகள் இருவருக்கும் நீதிபதி பிணை வழங்கினார் என்று கூறப்படுகின்றது. வழக்கு விசாரணை எதிர்வரும் ஆகஸ்ட் 27 திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.





# மட்டு. சின்ன ஊறணியில் திருட்டுச் சந்தேக நபரை கைது செய்ய முயன்ற பொலிஸ் மீது கத்திக் குத்து

## 2 பெண்கள் உட்பட 3 பேர் கைது; மூவர் தப்பி ஓட்டம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சின்ன ஊறணி பகுதியில் (வன்னியில்) தொலைக்காட்சி திருடியவர் எனக் கருதப்படும் திருடனைக் கைது செய்ய நேற்றுப் புதன் கிழமை பிற்பகல் சென்ற

பொலிஸார் மீது பெண்கள் உட்பட 6 பேர் கொண்ட குழுவினர் கத்தியால் குத்தியும் பொல்லுகளால் நையப் புடைத்தும் தாக்குதல் நடத்தியதில் இரு பொலிஸார் படுகாயமடைந்தனர். அவர்கள் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

தாக்குதலை மேற்கொண்ட குழுவைச் சேர்ந்த இரு பெண்கள், ஆண் ஒருவர் உட்பட 3 பேரைத் தாங்க கைது செய்துள்ளனர் எனவும், 3 பேர் தப்பி ஓடித் தலைமறைவாகியுள்ளனர் எனவும் மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டு. தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பகுதியிலுள்ள வீடு ஒன்றில் தொலைக்காட்சிஇ பெட்டி ஒன்றைத் திருடிச் சென்ற சம்பவம் தொடர்பாக பொலிஸார் ஒருவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்ட வன்னி என அழைக்கப்படும் சின்ன ஊறணி பகுதியைச் சேர்ந்த ஒருவர் தலைமறைவாகி இருந்து வந்துள்ளார்.

அவரது வீட்டில் அவர் இருக்கின்றார் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்து நேற்றுப் பிற்பகல் 01.30 மணியளவில் அந்த நபரைக் கைது செய்வதற்காக இரு பொலிஸார் சிவில் உடையில் அங்கு சென்று கைது செய்ய முற்பட்டனர்.

இதன் போது பொலிஸார் மீது அந்நபர் கத்திக் குத்துத் தாக்குதலை மேற்கொண்ட நிலையில், அங்கிருந்த இரு பெண்கள் உட்பட குழுவினர் பொலிஸார் மீது தாக்குதலை மேற்கொண்டதில் இரு பொலிஸாருன் பலத்த காயமடைந்தனர். அவர்கள் மட்டு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். கத்திக் குத்துத் தாக்குதலை நடத்தியவர் உட்பட 3 பேர் தப்பி ஓடியுள்ளனர்.

இதனை தொடர்ந்து பொலிஸார் மீது கத்திக் குத்துத் தாக்குதலை நடத்திய நபரின் தாயார், மனைவி ஆகிய இரு பெண்கள் மற்றும் ஆண் ஒருவர் உட்பட 3 பேரைக் கைது செய்தனர் .

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.



# இ.தொ.காவின் ஆதரவோடு கொத்மலையில் ஆட்சியைப் பிடித்தது தேசிய மக்கள் சக்தி!

(க.கிஷாந்தன்)

கொத்மலை பிரதேச சபைக்கு தெரிவான உறுப்பினர்களின் தலைவர், உபதலைவர் தெரிவு நேற்று மதியம் 02 மணியளவில் கொத்மலை பிதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அஜித் குமார முரமுதலிகெதர, திறந்த வாக்கெடுப்பு மூலம் பிரதேச சபையின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே நேரத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் சுப்பிரமணியம் சண்முகதாசன் சபையின் உப தலைவராகத் தேர்வானார்.

இந்தத் தெரிவுகள் மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எம். கே.பி.கே. சமிலா அத்தபத்து தலைமையில் இடம்பெற்றது.

இதில் தேசிய மக்கள் சக்தி சார்பாக அஜித் குமார முரமுதலிகெதர, ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக திஸ்ஸ சம்பத் பண்டார ஆகியோர் தலைவருக்காக போட்டியிட்டனர்.

இதில் திறந்த வாக்கெடுப்பிற்கு 30 வாக்குகள் கிடைக்கப்பெற்றதால், திறந்த வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதில் 30 வாக்குகளை பெற்று சபையின் தலைவராக தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அஜித் குமார முரமுதலிகெதர தெரிவு செய்யப்பட்டார்.



எதிராக போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக திஸ்ஸ சம்பத் பண்டார 22 வாக்குகளே பெற்றுக்கொண்டார். இதில் சர்வஜன அதிகாரம் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் வாக்களிப்பில் இருந்து விலகிக் கொண்டனர்.

உப தலைவர் தெரிவில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக சுப்பிரமணியம் சண்முகதாசன் பெயர் முன்மொழியப்பட்டது. அதனையடுத்து, ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக சண்முகம் கமலதீபன் பெயர் முன்மொழியப்பட்டது. இதன்போது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக சுப்பிரமணியம் சண்முகதாசன் 30 வாக்குகளை பெற்று சபையின் உப தலைவராக தெரிவு செய்யப்பட்டார். ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக சண்முகம் கமலதீபன் 22 வாக்குகளே பெற்றுக்கொண்டார். இதிலும், சர்வஜன அதிகாரம் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் வாக்களிப்பில் இருந்து விலகிக் கொண்டனர்.

55 உறுப்பினர்கள் கொண்ட கொத்மலை பிரதேச சபையில் கட்சிகளின் எண்ணிக்கை வருமாறு:-

- தேசிய மக்கள் சக்தி - 22
- இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் - 08
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 04
- ஐக்கிய மக்கள் சக்தி - 17
- சர்வஜன அதிகாரம் - 03
- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - 01



# உடப்புக் கடலில் இறந்த நிலையில் நேற்றுக் கரை ஒதுங்கிய கடலாமை

(உடப்பு க.மகாதேவன்)

புத்தளம் மாவட்டம் உடப்பு கடற்பரப்பில் நேற்று மாலை சுமார் ஐம்பது கிலோ எடை கொண்ட கடலாமை ஒன்று இறந்த நிலையில் கரையொதுங்கியது.

கடந்த காலங்களிலும் இது போன்ற கடலாமைகள் அடிக்கடி கரையொதுங்கின. இவை ஆழ்கடலில் வலிச்சல் வலையில் சிக்குண்ட பின்னர் மீனவர்களால் கழற்றி விடப்படுவதுண்டு என்று சில மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இலங்கைக் கடற்பரப்பில் இவை அருகிவரும் ஓர் இனம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# திருமலை நகர மான் பூங்காவை ஆக்கிரமித்துள்ள சட்ட விரோதக் கடைகளை அகற்ற நடவடிக்கை!

## எடுக்கப்படும் என்கிறார் தமிழரசு உறுப்பினர் யுவராஜ்








(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை நகரத்தின் மத்தியில் உள்ள மான் பூங்காவிற்கு இடைஞ்சலாக உள்ள சட்டவிரோத கடைகள் புதிய மாநகர சபை நிர்வாகத்தின் மூலம் அங்கிருந்து அகற்றப்படும் என மாநகரசபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சுப்பிரமணியம் யுவராஜ்குமார் தெரிவித்தார்.

திருகோணமலை சங்கமித்தை பௌத்த யாத்திரிகர் விடுதியை அண்மித்த கடற்கரையை அண்டியதாக மான்களுக்கான பாதுகாப்பு பிரதேசம் "மான் பூங்கா" என்ற பெயருடன் சென்ற 2 வருடங்களுக்கு முன் நகரசபையால் அமைக்கப்பட்டது.

இங்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னர் எவ்வித முறையான நடைமுறைகளையும் பின்பற்றாது கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கடைகளில் விற்கப்படும் உணவுகளை வாங்கி உண்பவர்கள் மீதி உணவை அந்த இடத்திலேயே எறிந்துவிட்டுச் செல்கின்றனர். அவற்றை உண்பதற்காக அங்கு கட்டாக்காலி நாய்கள் வருகின்றன. இந்த நாய்கள் மான்களிற்கும், அவற்றின் குட்டிகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறி உள்ளன. நாய்களால் மான்கள் கடிக்கப்பட்டு மரணம் அடைகின்றன. மான் குட்டிகளை நாய்கள் தூக்கி சென்று கொன்று உண்கின்றன. எனவே இந்த அவலங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இங்கு வாழும் மான்கள் திருகோணமலைக்கே தனித்துவமானவை. அத்துடன் சுற்றுலாப் பயணிகளையும் இவை கவர்கின்றன்ச்.

இந்நிலையில் மான்களுக்கான வாழிடம் அற்றுப்போவதால் தற்போது அவற்றின் எண்ணிக்கையும் குறைந்து வருகின்றது.

அது மட்டுமன்றி அப்பகுதியில் நடக்கும் வீதி விபத்துக்கள், சுற்றுலாப் பயணிகள் கவனமின்றி எறிந்துவிட்டுச் செல்லும் உணவு மிச்சங்களுடனான பொலித்தீனை மான்கள் உண்பதால் ஏற்படும் மரணம் போன்றவற்றாலும் இவற்றின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது.

இவற்றின் வாழ்விடப் பிரச்சினை மற்றும் உணவுப்பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக கடந்த காலங்களில் நகரசபையினால் மான் பூங்கா அமைக்கப்பட்டது.

இந்த மான் பூங்காவில் திருகோணமலை புனிதமரியாள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், றோட்டரிக் கழகம், எதிர்கால பசுமை உலகம் போன்ற அமைப்புக்களால் பல மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் றோட்டரிக் கழகத்தினால் தினமும் போதியளவில் மான்களுக்கு தேவையான உணவு வழங்கப்படுகின்றது.

இந்த மான் பூங்கா சுற்றுலாப் பயணிகளையும் உள்ளூர் மக்களையும் கவர்ந்து வருகின்றது.

திருகோணமலை நகர சபை கலைக்கப்பட்டு, சபை நிர்வாகம் இல்லாதிருந்த காலத்தில், நகரசபையின் சட்ட விதிகள் மீறப்பட்டு, இந்த இடத்தில் கடைகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் கட்டாக்காலி நாய்கள் தொகை அதிகரித்துள்ளது. இவற்றை விரைவாக வேறு இடத்திற்க்கு அப்புறப்படுத்த வேண்டும். இதன்மூலம் மான்களின் பாதுகாப்பை அதிகரிக்க முடியும்.

எனவே அடுத்த மாநகர சபையின் அமர்வின் போது அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் மான் பூங்கா கடைகளை அங்கிருந்து அகற்ற என்னால் பிரேரணை முன்வைக்கப்படும் என மாநகர சபை உறுப்பினர் சு.யுவராஜ்குமார் மேலும் கூறினார்.

# நடுக்கடலில் படகு புரண்டதால் தத்தளித்த 4 தமிழக மீனவரை காப்பாற்றிய கடற்படை









(ந.லோகதயாளன்)

இந்தியாவின் இராமேஸ்வரம் பகுதியில் இருந்து புறப்பட்ட தமிழக மீனவர்களின் படகு ஒன்று உடைந்த நிலையில் கடலில் தத்தளித்த 4 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர்.

தமிழ்நாடு இராமேஸ்வரம் பகுதியில் இருந்து புறப்பட்ட மீனவர்களின் நாட்டுப் படகு ஒன்று நடுக்கடலில் சேதமடைந்து தலைகீழாகப் பிரண்டுள்ளது.

படகில் இருந்த மீன்வர்கள் நால்வரும் புரண்ட படகின் மேல் அமர்ந்திருந்தபோது கடற்படையினர் அவதானித்து, அவர்களைக் காப்பாற்றி அழைத்து வந்து, மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மன்னார் பொலிஸார் மேலதிக விராணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தீவிரவாதத்துக்கு எதிரான எமது நிலைப்பாட்டுக்கு ஒபரேஷன் சிந்தூர் சிறந்த உதாரணம்; பிரதமர் மோடி

தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை ஒபரேஷன் சிந்தூர் உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஆன்மீக குருவும் சமூக சீர்திருத்தவாதியுமான ஸ்ரீ நாராயண குரு மற்றும் மகாத்மா காந்தி இடையிலான உரையாடலின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட பிரதமர் நரேந்திர மோடி இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்,



“இந்தியர்களை ரத்தம் சிந்த வைக்கும் தீவிரவாதிகளுக்கு உலகின் எந்த மறைவிடமும் பாதுகாப்பானது அல்ல என்பதை நாம் நிரூபித்துக்காட்டியுள்ளோம். இந்தியர்களை தாக்கும் தீவிரவாதிகள் உலகில் எந்த மூலையில் இருந்தாலும் அவர்கள் தேடி சென்று அழிக்கப்படுவார்கள்.

எந்தவொரு பாகுபாடும் இல்லாத வலுவான இந்தியாவை விரும்பிய ஆன்மிக தலைவரின் கொள்கை வழியில் நமது அரசு செயல்பட்டு வருகிறது. கடந்த 11 ஆண்டுகளாக எனது தலைமையிலான அரசு சமூக, பொருளாதார மற்றும் பாதுகாப்பு துறையில் இந்தியாவை வலுவானதாக மாற்ற பாடுபட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு தேவைகளுக்கு வெளிநாடுகளை சாந்திருப்பது குறைந்துள்ளது. இந்திய இராணுவம் 22 நிமிடங்களில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு எதிரியை மண்டியிட வைத்தது. எதிர்காலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களுக்கு உலகம் முழுவதும் வரவேற்பு கிடைக்கும்.” என்று தெரிவித்துள்ளார்.

# போதைப் பொருள் விவகாரம்: நடிகர் கிருஷ்ணாவிடம் விசாரணை



போதைப் பொருள் பயன்படுத்திய வழக்கில் நடிகர் ஸ்ரீகாந்த் கைது செய்யப்பட்ட நிலையில், நடிகர் கிருஷ்ணாவிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

‘கழுகு’ உள்ளிட்ட படங்கள் மூலம் கவனம் ஈர்த்த நடிகர் கிருஷ்ணாவும் போதைப் பொருளை பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து, அவரை விசாரணைக்கு ஆஜராகும்படி நுங்கம்பாக்கம் பொலிஸார் அழைப்பாணை அனுப்பினர். ஆனால், அவர் தலைமறைவானார். செல்போனும் சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டது. இதையடுத்து, 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடந்தது.

இந்நிலையில், நேற்று மாலை நடிகர் கிருஷ்ணா தனது வழக்கறிஞர்களுடன் நுங்கம்பாக்கம் பொலிஸ் உதவி ஆணையர் முன்னிலையில் விசாரணைக்கு ஆஜரானார். அவரிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். அப்போது, தான் எந்த வகையான போதைப் பொருள்களையும் பயன்படுத்தியது இல்லை என உறுதியாக தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து, அவரை மருத்துவ பரிசோதனை செய்ய பொலிஸார் முடிவு செய்துள்ளனர். அதன் பின்னரே போதைப்பொருள் பயன்படுத்தினாரா, இல்லையா என்பது தெரியவரும் என பொலிஸார் தெரிவித்தனர். இதனிடையே, கிருஷ்ணாவின் வீட்டிலும் பொலிஸார் சோதனை மேற்கொண்டனர். இந்த வழக்கு விவகாரம் தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

முன்னதாக, போதைப் பொருள் பயன்படுத்திய வழக்கில் நடிகர் ஸ்ரீகாந்த் கடந்த 23 ஆம் திகதி இரவு நுங்கம்பாக்கம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பின்னர், அவர் 10 மணி நேர விசாரணைக்கு பிறகு எழும்பூர் நீதிமன்ற மாஜிஸ்திரேட் தயாளன் முன்னிலையில் ஆஜர்படுத்தி, அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை 15 நாள் நீதிமன்ற காவலில் புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், ‘தீங்கிரை’ படத்தை தயாரித்த காங்கிரஸ், தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய 3 கட்சிகளிலும் முன்பு தகவல் தொழில் நுட்ப பிரிவில் நிர்வாகியாக இருந்த மயிலாப்பூரைச் சேர்ந்த பிரசாத் என்பவர் மூலம் தனக்கு போதைப் பொருள் பழக்கமானதாக நடிகர் ஸ்ரீகாந்த் வாக்குமூலமாக தெரிவித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தந்தை தலையில் கல்லைப் போட்டு கொலை செய்த மகன் கைது

இந்தியா – நெல்லை, மேலப்பாளையம் பகுதியில் தனது தந்தையின் தலையில் கல்லை போட்டு கொலை செய்துவிட்டு தப்பிச்சென்ற கல்லூரி மாணவர் ஒருவரை மேலப்பாளையம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி மாணவன் சரியாக படிக்காமல் சுற்றித்திரிகிறார் என கூறி அவருடைய தந்தை அவரை அடிக்கடி திட்டியுள்ளார்.

இதனால், அந்த மாணவனுக்கும் அவருடைய தந்தைக்கும் வாக்குவாதம் தீவிரமடைந்துள்ளது.



இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு வீட்டில் இருந்த அனைவரும் உறங்க சென்றதன் பின்னர் பெரிய கல்லொன்றை உறக்கத்தில் இருந்த தனது தந்தையின் தலையில் போட்டு கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலப்பாளயம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் மேற்படி மாணவனை நெல்லை பஸ் தரிப்பிடத்தில் வைத்து கைது செய்தனர்.

சம்பவம் தொடர்பாக மேலப்பாளையம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளனர்.



# அமெரிக்க தாக்குதலில் அணுசக்தி மையங்கள் மோசமாக பாதிப்பு; இழப்பீடு கோரும் ஈரான்

அண்மையில், அமெரிக்கா நடத்திய தாக்குதலில் தங்கள் நாட்டின் அணுசக்தி மையங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது. இதற்கு உரிய இழப்பீட்டை அமெரிக்கா வழங்க வேண்டும் என்றும் இல்லையென்றால் ஐ.நாவில் புகார் அளிக்கப்படும் எனவும் ஈரான் கூறியுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி அன்று இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதலில் இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்க படைகள் தாக்குதலில் இறங்கின. அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதலில் ஈரானின் முக்கிய அணுசக்தி மையங்களான ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்பஹான் உள்ளிட்டவை தாக்கப்பட்டன. இதை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உறுதி செய்திருந்தார்.

இந்நிலையில், ஈரானின் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பாகி, அமெரிக்க தாக்குதலில் தங்கள் தேசத்தின் முக்கிய அணுசக்தி மையங்கள் மோசமாக சேதமடைந்துள்ளதாக தற்போது தெரிவித்துள்ளார். ‘எங்கள் தேசத்தின் அணுசக்தி மையங்கள் மிக மோசமாக சேதமடைந்துள்ளன’ என அவர் உறுதி செய்தார்.

“தாக்குதலில் எங்கள் தேசத்தின் அணுசக்தி மையங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு அமெரிக்கா இழப்பீடு வழங்க வேண்டும். அப்படி இல்லாத பட்சத்தில் ஐ.நாவில் புகார் அளிக்க திட்டமிட்டுள்ளோம். போர்நிறுத்தம் தொடர்பாக எழுத்துபூர்வமான ஒப்பந்தம் எதுவும் இஸ்ரேல் உடன் மேற்கொள்ளப் படவில்லை. இஸ்ரேல் தாக்குதலை நிறுத்தி உள்ளது. அவ்வளவுதான்” என ஈரானின் வெளியுறவு துறையின் துணை அமைச்சர் சயீத் கதிப்சாதே லெபனானை சேர்ந்த ஊடக நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

முன்னதாக, ஈரானின் அணுசக்தி மையங்கள் முழுமையாக அழிக்கப்பட வில்லை என்ற செய்திகள் வெளியான நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இதனை முழுமையாக மறுத்தார்.

மேலும், ஈரான் அணுசக்தி மையங்கள் ‘முற்றிலுமாக அழிக்கப்பட்டன’ என்று அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

# அயதுல்லா அலி கமேனி இதுவரையில் போர் நிறுத்தத்தை அங்கீகரிக்கவில்லை

ஈரானின் உயர் தலைவர் அயதுல்லா அலி கமேனி இன்னும் போர் நிறுத்தத்தை அங்கீகரிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கு இடையிலான போர் நிறுத்தத்தை ஈரானின் மூத்த அதிகாரிகள் மற்றும் ஈரான் ஜனாதிபதி ஆகியோர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஈரானிய உயர் தலைவருக்கு பொதுவாக அரச விடயங்களில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் உள்ளது.



எனவே ஈரானுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள முக்கிய தரப்புகள், போர் நிறுத்தம் குறித்து கமேனி எப்போது கருத்து தெரிவிப்பார் என்பதில் கவனம் செலுத்துகின்றன.

இந்நிலையில் போர் நிறுத்தம் குறித்து கமேனி இதுவரை எதுவும் கூறாமல் இருப்பது பல கேள்விகளை எழுப்பியுள்ளதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

# ரிஞ்சானி மலையில் ஏறிய பெண் தடுக்கி விழுந்து உயிரிழப்பு

பிரேசிலை சேர்ந்த சுற்றுலாப் பயணி ஒருவர் மலை ஏறும் போது தடுக்கி விழுந்து உயிரிழந்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தோனேசியாவில் உள்ள ரிஞ்சானி மலையில் ஏறும் போதே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

26 வயதுடைய ஜுலியானா மரின்ஸ் என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.



கடந்த 21ஆம் திகதி மேற்படி விபத்து இடம்பெற்ற போதிலும், மூன்று நாள்களுக்குப் பின்னரே அப்பெண்ணின் சடலம் மீட்கப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சடலம் மீட்கப்பட்ட பகுதி செங்குத்தான சரிவு மற்றும் மூடுபனி நிறைந்தது என்பதால் மீட்பு பணி நடவடிக்கைகள் தாமதமடைந்தாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போதையற்ற தேசம் உருவாக்க வாரீர்....?

**இன்று ஜூன் 26 ஆம் திகதி போதைப்பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**



நடராஜன் ஹரன்

நமது நாட்டில் நாம் பொருள்களை வாங்கும் போது உற்பத்தித் திகதி, முடிவு திகதி, பலன் என ஒவ்வொன்றையும் பார்த்தே வாங்குகின்றோம். ஆனால், சிகரெட் பெட்டிகளிலோ, மதுசாரப் போத்தல்களிலோ பெரிய எழுத்துகளால் எழுதப்பட்டிருக்கும் "உடலுக்கு தீங்கானவை" என்னும் வாசகத்தை மட்டும் வாசிக்கவோ பின்பற்றவும் தவறிவிடுகிறோம்.

பரவி வரும் போதைப் பொருள் பாவனையை குறைக்கும் முகமாக பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தற்போது அறிமுகப்படுத்தப்படவுள்ளதோடு பாடசாலை மட்டத்தில் இவ் விழிப்புணர்வுத் திட்டங்கள் மூலம் போதைக்கு அடிமையானவர்களை அதிலிருந்து விடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார சேவைகள் பொதுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.




அவ்வகையில் இலங்கையில் சிகரெட் புகைப்பிடிப்பதால் மது பாவனையால் நாளொன்றுக்கு 60 பேர் மரணிக்கின்றனர். இதனால் வருடம் ஒன்றுக்கு இதனால் மரணிப்போரின் எண்ணிக்கை சராசரியாக 20 ஆயிரமாகும். சர்வதேச ரீதியில் வருடாந்தம் சுமார் 60 லட்சம் பேர் புகைப்பிடித்தலால் உயிரிழக்கின்றனர். மேலும் புகைத்தல் காரணமின்றி ஆனால் புகைப்பிடிப்பவர்களை சூழவுள்ள இரண்டாம் நிலை புகைத்தல் காரணமாக வருடம் ஒன்றுக்கு 06 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர்.

போதை என்றாலே, பெரும்பாலானோர் மது மற்றும் சிகரட்டை மட்டுமே நினைக்கின்றனர். இதையும் தாண்டி, உலகம் முழுவதும் மற்ற போதை பொருட்களின் உற்பத்தி, கடத்தல் அமோகமாக நடக்கிறது. எதிர்கால சந்ததியை சீரழிக்கும் சக்தி வாய்ந்த அரக்கன்களாக போதை மருந்துகள் உள்ளன. கஞ்சா, அபின், புகையிலை, மது, கொகைன், பிரவுன் சுகர், ஹெரோயின், ஊக்க மருந்து, ஒயிட்னர் முதலிய போதைவஸ்த்துப் பாவனை இளைஞர்களிடம் வேகமாக பரவும் பழக்கங்களாக மாறி வருகின்றது. உடலை மட்டுமின்றி, மனதையும் சிதைத்து, குடும்பத்தையும் அழித்து முடிவில் மரணத்துக்கே அழைத்து செல்லும் சமுதாய அரக்கனாக இந்தப் போதைப் பொருள் மாறியுள்ளது.

போதைப் பொருளானது பயன்படுத்துபவரை மட்டுமின்றி, குடும்பம் மற்றும் சமுதாயத்தையும் இது பாதிக்கிறது. இதுதான் அனைத்து நோய்களுக்கும் முன்னோடியாக இருக்கின்றது. சிலர் இதற்கு அடிமையாக மாறிவிடுகின்றனர். போதைப் பொருளைப் போலவே, அதை கடத்தி கோடிக்கணக்கில் பணம் ஈட்டப்படுவதாலும் பாதிப்பு ஏற்படுகிறது. 1987 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வொரு வருடமும் ஜூன் 26 ஆம் திகதி போதைப் பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது.

உலகம் முழுவதும் சுமார் 200 மில்லியன் பேர் போதைப் பொருள் பாவிப்பவர்களாக உள்ளார்கள் என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறியாமை, விரக்தி, உளவியல் குறைபாடுகள், பொழுது போக்கு, தற்காலிக உற்சாக தேவைப்

தொடர்ச்சி▼

# போதையற்ற தேசம் உருவாக்க வாரீர்....?

தொடர்ச்சி▲

பாடுகள் முதலிய காரணிகளாலேயே போதைப் பொருள் பாவனை அறிமுகமாகின்றது. இதுவே பின்னர் போதைப் பொருளுக்கு அடிமையாகும் தன்மையை ஏற்படுத்தி விடுகின்றது.

சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள், ஏழைகள், பணக்காரர்கள், விளையாட்டு வீரர்கள், ரசிகர்கள் என்று அனைவராலுமே போதைப் பொருள் பாவிக்கப்படுகின்றது. அவரவர் வசதிக்கும் தரத்துக்கும் ஏற்றவாறு மாறுகின்றதே தவிர குறைந்தபாடில்லை.

உலக வர்த்தகத்தில் பெட்ரோல், இராணுவ தளபாடங்களுக்கு அடுத்து, மூன்றாவது இடத்தில் போதைப் பொருள் வியாபாரம் உள்ளது. ஓர் ஆண்டுக்கு 5 லட்சம் கோடி ரூபாய்க்கு போதைப்பொருள் வியாபாரம் நடக்கிறது. போதைப் பொருள் பயன்படுத்துதல், கடத்துதல், விற்பனை செய்தல் ஆகியவற்றை ஒழிக்க, சட்டங்கள் மூலம் உலக நாடுகள் முயற்சித்து வருகின்றன. ஆனாலும் இதன் பயன்பாடு, அதிகரிக்கிறதே தவிர குறையவில்லை. தினமும் போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறன. நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்தியும் கடத்தல் நடக்கிறது.

போதைப் பொருள்களுக்கு எதிராக பல நாடுகள் பல்வேறு கட்டங்களில் முயற்சிகள் எடுத்து வருகின்றன. 1842 ஆம் வருடம் சீனா, இங்கிலாந்து நாடுகளுக்கு இடையில் போதைப் பொருளான ஓபியம் எனப்படும் அபினை சீனாவில் புழக்கத்தில் விடுவதில் ஏற்பட்ட பிரச்சினை போரிடும் அளவுக்குச் சென்றது. "ஓபியம் யுத்தம்" என்று இந்த நிகழ்வு வரலாற்றுப் பதிவுகளில் இடம் பெற்றுள்ளது.

அபின் உள்நாட்டு மருந்து தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. கொடிய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வலி நிவாரணியாக அபின் கலந்த மருந்துகள் நாட்டு வைத்தியத்தில் காலங்காலமாக உபயோகத்தில் உள்ளது. பல வருடங்களுக்கு முன்பு மருத்துவரின் சான்றோடு அபின் மருந்தகங்களில் வாங்கும் முறை இருந்தது. பெத்திடின் போன்ற ஆங்கில மருந்து, வலியை குறைப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. மருந்தை மருந்தாக உட்கொள்ளாமல் விருந்தாக அதிலேயே திளைத்தால் விபரீத விளைவுகள் ஏற்பட்டு அது ஒருவரை அழித்துவிடும்.

1908இல் இருந்து முனைப்பாக சீனா, ஆப்பிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் போதைப் பொருள்கள் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1909இல் இருந்து சர்வதேச அளவில் போதைத் தடுப்பு குற்றங்களுக்கு முத்தாய்ப்பு வைத்தது போல் 1987இல் ஐக்கிய நாடுகள் சபை பிரத்யேக போதை தடுப்பு கூட்டத்தொடர் நடத்தியது. சீன மாகாணங்களான ஹியூமென், ஹுவாடோங் பகுதி ஆட்சியரான லின் செச்சு என்பவர், அபின் புழக்கத்தை முடக்க கடும் நடவடிக்கை எடுத்தார். அவர் சுமார் 200 அபின் வியாபாரிகளை கைது செய்து 12 லட்சம் கிலோ அபினை கைப்பற்றினார்.

1839ஆம் வருடம் ஜுன் மூன்றாம் திகதி துவங்கி, 23 நாள்கள் 500 பணியாளர்கள், கைப்பற்றிய அபினை, உப்பு, சுண்ணாம்பு கலந்து அழித்து கடலில் கரைத்தனர். அந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகளை போற்றும் வகையில் ஜுன் 26ஆம் நாள் போதைப் பொருள் ஒழிப்பு தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

1988 ஆம் ஆண்டில் இருந்து இது அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகளின் 2007ஆம் ஆண்டின் அறிக்கைப்படி சட்டத்துக்குப் புறம்பான போதைப் பொருள் வணிகத்தின் மதிப்பு ஆண்டொன்றுக்கு சுமார் 320 மில்லியன் டொலர். பல ஆயிரம் கோடி ரூபா பணம் புரள்வதால் கடத்தல்காரர்களின் பலமும் அதிகம் என்பதை சொல்ல வேண்டியதில்லை. சர்வதேச காவல் அமைப்புக்குப் போதைப் பொருள் கடத்தல் மிகப்பெரிய சவால்.

அமெரிக்காவில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப் பகுதியிலேயே புகையிலை பயிரிட ஆரம்பிக்கப்பட்டது. அமெரிக்கர்கள் காயங்களை சுத்தமாக்கும் தொற்று நீக்கியதாகவும் வலி நிவாரணியாகவும் புகையிலையைப் பயன்படுத்தினர். வட அமெரிக்காவில் பணம் உழைக்கும் பயிராக புகையிலை இருந்துள்ளது.

1847 ஆம் ஆண்டு பிலிப் மொரிஸ் என்பவரே முதன் முதலாக புகையிலையைப் பயன்படுத்தி சிகரெட் தயாரிக்கும் நிறுவனத்தை ஆரம்பித்திருந்தார். எனினும் சிகரெட் பயன்பாடு என்பது ஆரம்ப காலங்களில் இராணுவ வீரர்களிடமும் பாதுகாப்புப் படையினரிடமே காணப்பட்டது.

1953 களில் சிகரெட், புகையிலை பாவனையால் பலவகையான புற்றுநோய் ஏற்படுகின்றது என டாக்டர் எமல் எல் வைன்டஸ் கண்டுபிடித்தார்.

இதனைத் தொடர்ந்து 1964 களில் அமெரிக்க அரசு புகைபிடிப்பதால் சுகாதாரத்துக்குக் கேடு என்னும் நோக்கில் அவர்களுக்கு எதிராகவும் விற்பனைக்கு எதிராகவும் சட்டம் உருவாக்கியது.

மனிதனுக்கு மரணத்தைத் தோற்றுவிக்கும் முக்கிய காரணிகளில் புகையிலை இரண்டாம் நிலையிலுள்ளது. இதனாலேயே புகையிலை பாவிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக உலக சுகாதார அமைப்பு 1987 ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதியை உலக புகையிலை எதிர்ப்புத் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து உலக நாடுகள் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31 ஆம் திகதியை உலக புகையிலை எதிர்ப்புத் தினமாக ஒவ்வொரு கருப்பொருளை மையமாகக் கொண்டு விழிப்புணர்வு நாளாக அனுஷ்டித்து வருகின்றன.

புகைத்தல் புகை பிடிப்பவரை விட அச் சூழலில் இருக்கும் ஏனையவர்களையே அதிகளவு பாதிக்கச் செய்கின்றது. புகைப்பவர்கள் தமது ஆயுட் காலம் முடிவதற்கு முன்பே தமது உயிரினை அழித்துக் கொள்கின்றனர். இதேவேளை தன் உயிரை அழிப்பதற்கே இந்த உலகில் அனுமதி இல்லாத போது தன் சுய நலத்துக்காக அடுத்தவர் உயிர்களின் அழிவுக்கு மற்றவர்கள் காரணமாக இருப்பதை எவ்வாறு அனுமதிக்க முடியும்?

புகைக்கும் போது வெளிவரும் புகையில் 400 இற்கும் அதிகமான நச்சு இரசாயனப் பொருள்கள் காணப்படுகின்றன. இவற்றில் 50 வீதமானவை சுவாசப் பற்றுநோயை ஏற்படுத்துபவையாகவுள்ளன. அத்துடன் இப்புகையை சுவாசிக்கும் சிறு குழந்தைகளின் எண்ணங்களில் எதிர்மறையான விளைவுகள் ஏற்படுத்தப்படுகின்றன என்று ஆஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகம் மற்றும் நைட்டிங் காம் பல்கலைக் கழகங்களின் ஆய்வு முடிவுகள்

தொடர்ச்சி▼

# போதையற்ற தேசம் உருவாக்க வாரீர்....?

தொடர்ச்சி▲

தெரிவிக்கின்றன.

புகையியைச் சுவாசிப்பதால் இதயம், நுரையீரல் தொடர்பான நோய்கள் ஏற்படுகின்ற அதேவேளை நீரிழிவு, இரத்தக் கொதிப்பு, உடல் உறுப்புகளில் பாதிப்பு, பல், உதடுகளின் நிறம் மாறுதல், இருமல் என புதுப்புது நோய்கள் புகைப்பவர்களின் உடலினை ஆக்கிரமித்து கொள்கின்றன. இதனால் புகைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் தமது வாழ்நாளினை வைத்தியசாலைகளிலும் மருந்துகளுடனும் கழிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர்.

புகையிலையை பல விதங்களில் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக வெற்றிலையுடன் சேர்த்து உண்ணல், மூக்குப் பொடியாக பயன்படுத்தல், குழாய்களைப் பாவித்து புகையை உறிஞ்சுதல், இதனை விட பீடி, சுருட்டு, சிகரெட் என பல முறைகளில் புகையிலையை பயன்படுத்துகின்றனர்.

புகை பிடிப்பதால் சிலவேளைகளில் உடலின் அல்லது மனதின் உபாதைகளுக்குநிவாரணம்கிடைக்கலாம். ஆனால், இவற்றால் இறுதியில் கிடைக்கும் பிரதிகூலங்களும் வேதனைகளும் செல்லிலடங்காதவை.

புகையை உள் இழுக்கும் போது புகையிலுள்ள நிக்கோர்டின் என்னும் இரசாயனப் பொருள் மூளையைச் சென்றடைகின்றது. ஒவ்வொரு முறையும் இழுக்கும் போதும் அந்த இரசாயனப் பொருள் மூளைக்கு செல்கின்றது. அத்துடன் இந்த இரசாயன நச்சுப் பொருளுடன் 700 வகையான வேறு இரசாயனக் கூட்டுப் பொருட்களும் செல்கின்றன.

மூளையின் மனநிலை மாற்றுக் கலங்களுக்கு நிக்கோர்டின் உட்பட இரசாயனக் கூட்டுப் பொருள்கள் செல்வதால் புகைபிடிப்பவர்களுக்கு ஒரு வகை மாயையைத் தோற்றுவிக்கின்றனர். சில மன அழுத்தங்களுக்கு உள்ளாகியிருப்பவர்கள் இந்த மாயையை ஒரு சிறந்த தீர்வாக எண்ணுகின்றனர். எனவே புகைபிடித்தலை ஒரு பழக்கமாக ஏற்றுக்கொள்ள முனைகின்றனர்.

## மன அழுத்தங்களுக்கு புகைத்தல் தீர்வாகுமா?

இலங்கை இந்தியா போன்ற நாடுகளைப் பொறுத்தவரை அநேகமான ஆண்கள் வீடுகளிலோ, அலுவலகங்களிலோ அல்லது பொது இடங்களிலோ ஏற்படும் பிரச்சினைகளுக்கும் அதனால் ஏற்படும் மன அழுத்தங்களுக்கும் தீர்வாகவே புகைபிடிப்பதாகக் காரணம் சொல்வார்கள். எந்தவொரு பிரச்சினைகளையும் பேசியோ, ஆராய்ந்தோ, சிந்தித்தோ முடிவெடுக்காது புகைபிடித்தலைக் காரணம் சொல்வது மடமையாகும்.

இலங்கையிலேயே புகைபிடிப்பதற்காக பல காரணங்களை சொல்கின்றனர். மகிழ்ச்சிக்காகவென 22 வீதமானோரும் நண்பர்களுடனும் பொழுது போக்கவென 8.2 வீதமானோரும் புகைப் பழகத்திலிருந்து விடுபட முடியாத காரணத்தால் 17 வீதமானோரும் தனிமையைப் போக்க 10.5 வீதமானோரும் பரீட்சித்துப் பார்க்கவென 8.7 வீத மானோரும் நண்பர்களின் அழுத்தங்களுக்காக 10 வீதமானோரும் பிரச்சினைகளுக்காக 15 வீதமானோரும் தாம் புகைபிடிப்பதற்கான காரணமாகச் சொல்கின்றனர்.

அத்தியாவசியப் பொருள்கள், எரிபொருட்களின் விலையேற்றத்தால் திணறுகின்ற பொது மக்கள் சிகரெட், சுருட்டு, மது போன்றவற்றின் விலையை எத்தனை சதவீதத்தாலும் அரசு உயர்த்தினாலும் எந்தவித ஆர்ப்பாட்டமும் செய்யாது அதிக பணம் கொடுத்த வாங்கி உபயோகிக்கின்றனர். எனவேதான் அரசு எந்தவித அச்சமோ, தயக்கமோ இன்றி அடிக்கடி இத்தகைய பொருள்களின் விலைகளை அதிகரித்து வருகின்றது. இந்த விலையேற்றத்தால் குடும்பப் பெண்களும் குழந்தைகளும் உறவினர்களுமே பாதிக்கப்படுகின்றனர்.

200 குடும்பங்கள் சிகரெட் வாங்க மாதாந்தம் செலவு செய்யும் தொகை 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவாகும். ஒரு நாளைக்கு 4101 மில்லியன் சிகரெட்டுகள் விற்கப்படுகின்றன.

இலங்கை மட்டுமல்லாது உலக நாடுகள் பல சிகரெட் விற்பனை மூலமே அதிகளவு வருமான வரியினை ஈட்டுகின்றன. இலங்கை அரசு சிகரெட் மூலம் 12 வீத வருமானத்தினைப் பெற்று வருகின்றது. புகைபிடிப்பதற்காக 5800 கோடி ரூபாவை வருடமொன்றுக்கு செலவிடுகின்றனர்.

அதேவேளை, புகை தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை வழங்க சுகாதார அமைச்சு 22 வீதம் செலவிடுகின்றது. புகைபிடிப்பவர்களில் 60 பேர் உயிரிழக்கின்ற அதேவேளை 60 பேர் புதிதாகப் புகைபிடிக்கப் பழகுகின்றனர்.

புகைபிடித்தலை ஊக்குவிக்க பிரித்தானியா, அமெரிக்கா புகையிலைக் கம்பனிகள் கோடி கோடியாக அமைதியாக இருந்து கொண்டு இலாபம் உழைக்கின்றனர். ஆனால், இவற்றை உணராத வறிய, சாதாரண குடும்பத்தவர்கள் அற்ப மகிழ்ச்சிக்காக அவர்களுடைய உடலையும் கெடுத்து குடும்ப மகிழ்ச்சியையும் சீரழித்து பணத்தையும் விரயம் செய்து கொண்டிருக்கின்றனர்.

எனவே தான் புகைப்பிடித்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த அரசும் அரசு சாராத நிறுவனங்களும் சமூக நிறுவனங்களும் முன்வர வேண்டும். இதன் ஒரு முயற்சியாக இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமூக அபிவிருத்திப் பிரிவு இன்று முதல் புகையிலை எதிர்ப்பு வாரங்களாக பிரகடனப்படுத்தியுள்ளது.

பொது இடங்களில் புகைபிடித்தலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றை எவரும் கருத்தில் கொள்வதில்லை. எனவே இத்தகையோரைக் கைது செய்து கடுமையான சட்ட நடவடிக்கையெடுக்க பொலிஸார் முன்வர வேண்டும். அதேபோல 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இவற்றை விற்கத் தடையுள்ளபோது கடை உரிமையாளர்கள் இரகசியமாக விற்று பணம் சம்பாதிக்கின்றனர்.

அதேபோல் பொது இடங்களிலோ, ஊடகங்களிலோ சிகரெட், புகையிலை தொடர்பான விளம்பரங்கள் செய்வதும் சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டு பின்லாந்தும் 1994 ஆம் ஆண்டு பிரான்ஸூம் புகைத்தல் தொடர்பான விளம்பரங்களை முற்றாகத் தடை செய்துவிட்டன. அதேபோல எமது நாட்டு ஊடகங்களும் வர்த்தக அமைப்புகளும் இவற்றைத் தடை செய்ய முன்வர வேண்டும். போதை அற்ற உலகை நோக்கி நாம் இணைந்து பயணிப்போம்

# இன்றைய ராசி பலன்கள் - 26.06.2025


மேஷம்

இன்று அதிக பயணங்கள் காணப்படும். எந்த செயலையும் தொடங்குவதற்கு முன் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி காணலாம். கவனக் குறைவு காரணமாக பணிகள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

உறவில் இன்று புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இன்று மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் ஏற்படும். குடும்பத் தேவைக் காக இன்று பணம் செலவு செய்வீர்கள்.

மூட்டுக்களில் விறைப்பு அல்லது வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பயனுள்ள உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.


ரிஷபம்

இன்று சிறந்த வாய்ப்புகளை ஏற் படுத்திக் கொள்ள இயலும். எதிர்பாராத வகையில் கிடைக்கும் சொத்து உங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும்.

கடின உழைப்பு வெற்றி பெற்றுத் தரும். உங்கள் முயற்சிக்கான பாராட்டு பெறுவீர்கள்.

நீங்கள் குடும்ப வட்டாரத்தில் மகிழ்ச்சியுடனும் அன்புடனும் காணப்படுவீர்கள். இதனால் உங்களுக்கு மிகுந்த திருப்தி கிடைக்கும்.

காப்பீடு மற்றும் பூர்வீகச் சொத்து வகையில் பண வரவுக்கு வாய்ப்புள்ளது. எனவே நிதி விஷயங்களை கவனமாக கட்டுப்பாட்டுடன் பராமரிப்பது நல்லது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மருத்துவ ஆலோசனை மேற்கொள்வது சிறந்தது.


மிதுனம்

இன்று நீங்கள் சுறுசுறுப்பாக செயல்களில் ஈடுபட்டிருப்பீர்கள். உங்க ளின் இனிமையான தகவல் தொடர்பின் மூலம் பலவற்றை சாதிப்பீர்கள்.

இன்று உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். நீங்கள் உங்கள் பனியின் இயல்பை விரிவுபடுத்தலாம்.

குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். குடும்ப உறுபினர்களுடன் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படும். உங்கள் கையிலிருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக் காது.


கடகம்

புனித மற்றும் ஆன்மீக யாத்தி ரைக்கு இது உகந்த நாள். ஏழைக ளுக்கு உணவு அளித்தல் மற்றும் தொண்டு நடவடிக்கைகள் மூலம் நன்மை பெறலாம்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. பணி சம்பந்தமான முக்கிய செயல்க ளில் தாமதங்களை எதிர்கொள்ள நேரும்.

குடும்ப பெரியோர்களுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியை பராமரிக்க அமைதியை மேற்கொள்வது நல்லது.

பண வரவை விட செலவு அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். தோள் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.


சிம்மம்

ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடு வது நன்மை அளிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகளில் சிறந்த பலன் களை காண இயலாது. உங்கள் பணி களை கவனமாகக் கையாள வேண்டும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும். அகந்தை ப் போக்கின் காரணமாக உறவில் பாதிப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது. அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

பதற்றம் காரணமாக சில அசௌகரியங்களை உணர்வீர்கள். உடல் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.


கன்னி

இன்று உங்களுக்கு வெற்றி கிடைக் கும் நாள். புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களை உருவாக்கிக்கொள் வீர்கள். இது உங்களுக்கு சிறந்த நாள்.

நீங்கள் உங்கள் பணிகளில் சிறப் பாக செயலாற்ற இயலும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். ஆன்மீக விஷயங்களுக்கு செலவு செய்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.


துலாம்

இன்று அதிக பணிகள் காணப்படும். உங்கள் நேரம் மற்றும் ஆற்றலை நன்கு பயன்படுத்த திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

பணி சம்பந்தமான பயணம் காணப் படுகின்றது. உங்கள் பணிகளை சிறப் பாக ஆற்ற நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம்.

குடும்ப வளர்ச்சி திருப்திகரமாக இருக்காது. குடும்ப உறுப்பினர்களிடையேகருத்து வேறுபாடு காணப் படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய நீங்கள் கடன் வாங்குவீர் கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


விருச்சிகம்

பலன்கள் இன்று உங்களுக்கு சாதக மாக அமைய நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும். சுப காரியங்கள் தள்ளிப் போகும்.

புதிய வேலைக்கான வாய்ப்புகள் குறைவு. உங்கள் பணிகளை மேற் கொள்வதில் தாமதம் காணப்படும்.

உங்கள் வார்த்தைகள் மற்றவரை காயப்படுத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள். குடும்ப உறுப்பினர்களிடையே மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. தேவை யற்ற செலவுகள் கவலையை ஏற்படுத்தும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.06.2025




இன்றைய நாளை இசை கேட்பது, தொண்டு செய்வது, தன தருமங்கள் செய்வது போன்ற ஆன்மீக காரி யங்களுக்கு பயன்படுத்துங்கள். இதனால் உங்களுக்கு மன ஆறுதல் மற்றும் மகிழ்ச்சி கிடைக்கும்.

பணியில் திருப்தி நிலை குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். தொழில் செய்பவர்கள் தங்கள் செயல்களில் தாமதங்களை உணர்வார்கள்.

உங்கள் தாயுடன் புரிந்துணர்வு கொள்வதில் சில பிரச்சினை காணப்படும்.. இதனை தீர்த்து நல்லுறவை ஏற்படுத்துங்கள்.

இன்று சிறப்பான நிதிநிலைக்கு ஏற்ற நாள் அல்ல. இன்று பண வரவு செலவு இரண்டும் காணப்பட்டாலும் செலவு அதிகமாக இருக்கும்.




உங்கள் தவகல் தொடர்பு திறமை மூலம் சிறந்த பலன்களைக் காண லாம். உங்கள் திறமைகளை மேம் படுத்த இன்றைய நாளை பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை நேர்மை யாக மேற்கொள்வீர்கள். சக பணியாளர்களுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் வார்த்தை களை கவனமாக தேர்ந்தெடுத்து பேச வேண்டும்.

உங்கள் வீட்டு பெரியவர்களுடன் மோதல்கள் ஏற்பட வாய்புள்ளது. உறவில் மகிழ்ச்சி யை பராமரிக்க அனு சரித்து நடந்து கொள்வது சிறந்தது.

இன்று அதிக பணம் செலவு செய்ய நேரலாம். நிதியில் ஸ்திரத்தன்மை காண சேமிக்க வேண்டியது அவசியம்.

கண் எரிச்சல் மற்றும் பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று எதிர்பாராத நன்மைகள் நடக்கும். நீங்கள் பயணம் ஒன்றை மேற்கொள்ளலாம்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. தொழில் செய்ப வர்கள் மிதமான பலன்களை காண் பார்கள்.

கருத்து வேறுபாடு ஒன்றின் காரணமாக உங் கள் நெருங்கிய உறவுடன் மோதல் ஏற்பட வாய்ப் புள்ளது.

இன்று மிதமான பண வரவு காணப்படும். சேமிப் பதற்கான வாய்ப்பும் இன்று குறைவு.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள் வலி மற்றும் சளி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களுக்கு சாதகமாக பலன்கள் அமைய நீங்கள் சில விஷயங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். இதனால் உங்களின் பணிகளை முடிப்பதைக் கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. பணியில் சிறப்பாக செயலாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் குழந்தை முன்னேற்றம் குறித்த கவலை காணப்படும். குடும்ப உறுப் பினர்களுடன் அதிக நேரம் செலவு செய்வதால் அவர்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சி அடைவார்கள்.

இன்று நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவு குறிந்து காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.



# பகிடிவதை துன்புறுத்தல்களை தடுப்பதற்கு விசேட செயலணி

பகிடிவதை உள்ளிட்ட அனைத்து வகையான துன்புறுத்தல்களையும் தடுப்பதற்காக செயலணி நியமிக் கப்பட்டுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவவினால் 16 பேர் கொண்ட இந்த செயலணி நியமிக்கப்பட்டுள் ளது.

விடயத்திற்கு பொறுப்பான அமைச் சர் என்ற வகையில் பிரதமர், கலா நிதி ஹரிணி அமரசூரியவின் ஆலோச னைக்கமைய இந்த செயலணி நிய மிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங் களில் நடைபெறும் பகிடிவதை களை இதன்மூலம் ஒழிப்பதே அர சாங்கத்தின் நோக்கமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனைத்தவிர மாணவர்களுக்கு ஏனைய மாணவர்களால், நிறுவன முகாமைத்துவத்தினால் அல்லது வேறுதரப்பினரின் மூலம் மேற்கொள்ளப் படும் அனைத்து வகையான துன் புறுத்தல்கள் மற்றும் அந்த தரப்பின ரால் பேராசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கு மேற்கொள்ளப் படும் துன்புறுத்தல்கள் ஆகியவற் றையும் தடுப்பது இந்த செயலணி யின் நோக்கமாகும்.

விரைவில் இந்த செயலணியின் கீழ் பல்கலைக்கழக மட்டத்திலும் ஏனைய உயர்கல்வி நிறுவன மட்டத்திலும் பிரிவுகளை நிறுவுவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.